[1978 செப்டம்பர் 12

கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடைநிலைத் தர தகுதியடைந்த கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஐந்து ரூபாய் சிறப்புச் சம்பளம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்வு நிலை சம்பள வீதங்கள் வழங்கப்பட்டுள்ள அத்தகைய ஆசிரியர்களுக்கு, நிறுத்தப் பட்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இதனுல் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) கைத்தொழிலாசிரியராக பணியாற்றியவர்கள் தேர்வு நிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறும்போது தேர்வு நிலை சம்பள விகிதம் பெறுவதால் அவர்களுக்கு ஏற்கெனவே பெற்ற சிறப்பூதியம் ரு. 5 / தொடர்ந்து கொடுக்க முடியாது என அரசு ஆணையிட்டுள்ளது.

(உ) எட்டு பேர் மட்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: கைவினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற உடனே அவர்களுக்குச் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது. தேர்வு நிலை என்பது 10 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படு கிறது. இடைநிலை ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் கைவினைப் பயிற்சி ஆசிரியர்களுடைய ஊதிய விகிதமும் சமம். அந்தக் கைவினைப் பயிற்சி ஆசிரியர்கள் சிறப்பு ஊதியம் பெறக்கூடிய வகையில் மீண்டும் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இவர்கள் உயர்ந்த விகிதத்தில் ஊதியம் பெற்றுக்கொண்டிருப்பதால், சிறப்பூதியம் கொடுப்பதற்கில்லை.

H. K. R. H. College, Uthamapalayam

* 73 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of H.K.R.H. College, Uthamapalayam. Madurai district, have not been paid their salary arrears from December 1976 to May 1977 ;

1978 செப்டம்பர் 12]

(*b*) whether it is also a fact that the management of the said college has misappropriated the college funds;

(c) whether the Madurai University Teachers Association has made any appeal to appoint an interim Administrator in the place of the Management Committee; and

(*d*) if so, the action taken thereon?

எச். கே. ஆர். எச். கல்லூரி, உத்தமபாளையம்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம், எச். கே. ஆர். எச். கல்லூரியின் ஆசிரியர்களுக்கு 1976 டிசம்பர் முதல் 1977 மே வரையிலான கால அளவிற்குரிய சம்பள நிலுவை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) மேற்சொன்ன கல்லூரியின் நிர்வாகம் கல்லூரி நிதிகளை கையாடல் செய்துள்ளது என்பதும் உண்மையா?

(உ) நிர்வாகக் குழுவுக்குப் பதிலாக தற்காலிகமாக நிர்வாகி ஒருவரை நியமிக்குமாறு மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் முறையீடு ஏதேனும் செய்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) இக்கல்லூரியை ''வக்ப் போர்டு'' ஏற்று நடத்தும்படி அரசு உத்தரவிட்டது. கல்லூரிக்கு புதிய நிர்வாகக்குழு ஒன்றை 'வக்ப் போர்டு'' அமைத்து அது கல்லூரியை நடத்தி வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்தப் புதிய நிர்வாகக் குழுவானது நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, கடந்த கால 6 மாத கால ஊதியத்தை ஆசிரியர்களுக்கு வழங்கியிருக்கிறதா? அதற்கு மேலாக அந்த ஆசிரியர்களுக்கு அரசே முழு ஊதியத்தையும் வழங்கும் என்று பொறுப்பேற்றுக்கொண்ட காரணத்தால், அதை அரசே வழங்குவதற்கு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கடந்த கால பாக்கியைத் தர வேண்டியது கடந்த கால நிர்வாகம்தான். அவர்கள் தர வேண்டியதை அரசு சார்பில் தருவதற்கு விதியில் இடம் இல்லை. ஆனுல் அந்த பாக்கியை அந்த நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தர அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்தக் கல்லூரியை வக்ஃப் போர்டு மேற்கொண்ட பிறகும் பிராதுகள், புகார்கள் வந்து கொண்டிருப்பது மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. க. மீனுட்சிசுந்தரம்: கல்லூரி நிர்வாகம் கல்லூரியிலுள்ள ஆசிரியர் நல நிதி, ஆசிரியர் ஊதியம் போன்றவற்றிலிருந்து பணத்தைக் கையாடல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப் பட்ட நிர்வாகிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனையை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

Short Term B.Ed., Training Classes

74 *Q.*—THIRU M. SANKARALINGAM, THIRU K. MEENAKSHISUNDARAM and THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Question No. 13 on 31st December 1977 on the floor of the Legislative Council:

(*a*) whether there is any proposal with the Government to resume the Short Term B.Ed., Training Classes;

(*b*) whether any representation has been received by the Government in this regard; and

(*c*) if so, the action taken thereon?

குறுகிய கால பி. எட். பயிற்சி வகுப்புகள்.

திரு. எம். சங்கரலிங்கம், திரு. க. மீனுட்சிசுந்தரம், திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 31-12-1977 ஆம் நாளன்று வினு எண் 13-க்கு